# வருமான சமத்துவத்தினை ஏற்படுத்துவதில் ஸகாத்தின் வகிபாகம்: அம்பாறை மாவட்டத்தினை மையப்படுத்திய ஓர் ஆய்வு)

**Supervisor**
*Dr. SM. Ahamed Lebbe,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Miss. MF. Fazeela,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

பல தசாப்தங்களாக உலகின் அனைத்து நாடுகளினாலும் எதிர்நோக்கப்படும் பாரிய பிரச்சினையாக வருமான சமத்துவமின்மை காணப்படுகின்றது. வருமான சமத்துவமின்மை என்பது குறித்த ஒரு நாட்டில் எல்லா நபர்களுக்கும் குறித்த சமவிகிதத்தில் வருமானம் பகிரப்படாத நிலையாகும் (Todaro,1981). இது நாட்டின் GDP மற்றும் GNP என்பவற்றை நேரடியாக பாதித்து அபிவிருத்திக்குத் தடையாக அமைகின்றது. அனைத்து உலக நாடுகளின் கினி குணகமானது 2008 உடன் ஒப்பிடுகையில் 2009 இல் 0.532 இலிருந்து 0.521 ஆக குறைவடைந்து காணப்பட்ட போதிலும் உலகின் 10 சதவீத சனத்தொகையானது உலக மொத்த வருமானத்தில் 42 சதவீதத்தினை உள்ளடக்கியுள்ளது (UNDP, 2011). இவ்வருமான இடைவெளிப் பிரச்சினைக்குத் தீர்வாக உலகளாவியரீதியில் மேலைத்தேயப் பொருளாதார அமைப்பினால் பின்பற்றப்பட்டு வருகின்ற இயக்கப்பாட்டு முறையே வரிமுறைமையாகும். இருப்பினும் வருமான இடைவெளிப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட இத்திட்டங்கள் தோல்வியடைந்து காணப்படும் நிலையில், உலகில் இஸ்லாமிய நாடுகளால் பின்பற்றப்பட்டுவருகின்ற இஸ்லாமிய பொருளாதாரத்தின் ஸகாத் முறைமையானது ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் மாத்திரம் பணம் சுழல்வதனைத் தடுத்து, செல்வப் பங்கீட்டை சீர்செய்து, சமத்துவத்தை ஏற்படுத்துகின்றது. இப்பிரச்சினையானது உலகளாவியரீதியில் மட்டுமன்றி இலங்கையிலும் பாரிய ஒரு பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. 2009/2010 இன் ஆண்டறிக்கைக்கிணங்க கினி குணகமானது 0.49 ஆக கணிப்பிடப்பட்டது (HIES, 2012). ஆய்வுப்பிரதேசமான அம்பாறை மாவட்டத்தின் 70 சதவீதமான முஸ்லீம்களினை தன்னகத்தே கொண்டுள்ள சம்மாந்துறை பிரதேசத்தில் மக்களிடையே வருமானமானது சமமற்ற முறையில் பகிரப்பட்டுக் காணப்படுகின்றமையானது அப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு தடையாக அமைகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் ஸகாத் நிதியமானது 1976 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன்பின்னணியில் வருமான சமத்துவத்தை ஏற்படுத்துவதில் ஸகாத் நிதியத்தின் செயலாற்றத்தினை மதிப்பிடும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்குத் தேவையான முதலாம் நிலைத்தரவுகளானது நோக்க மாதிரி எடுப்பு முறை மூலம் 200 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள், களஆய்வு மற்றும் இலக்குக்குழு கலந்துரையாடல்கள் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகளானது சம்மாந்துறை ஸகாத் நிதியம், பிரதேச செயலகம், இணையத்தளங்கள் மற்றும் சஞ்சிகைகள் வாயிலாகவும் பெறப்பட்டன. மேற்குறித்த தரவுகளானது, மொத்த வருமானமானது ஸகாத்தின் தொழிற்பாடாக அமைகின்றது ($TI = f(Z)$) என்பதனை மதிப்பிடும் நோக்கில் $Y = \beta_0 + \beta_1 X + U_t$ என்னும் பிற்செலவு மாதிரியுரு பொருத்தப்பட்டு கணனிக் கணிப்பீட்டின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வின் முடிவிற்கிணங்க, இவ்வருமான சமமின்மையினால் சம்மாந்துறை பிரதேசத்தில் 45 சதவீதத்தினர் உளரீதியான ஏற்றத்தாழ்வினையும் 40 சதவீதமான மக்கள் வறுமையினையும் அனுபவிக்கின்ற அதேவேளை 15 சதவீமானவர்கள் சமூகத்தில் புறந்தள்ளப்படுவதுடன் தங்களது அடிப்படை தேவைகளைக்கூட நிறைவுசெய்ய முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இப்பிரதேசத்தின் வருமான சமமின்மைக்கு பிரதான காரணமாக குறிப்பிட்ட ஒருசாராரிடம் மாத்திரம் பரம்பரையாக சொத்துக்கள் குவிக்கப்படுதல் அறியப்பட்டுள்ளது. ஸகாத்திற்கும் மக்களின் மொத்த வருமானத்திற்குமிடையிலான தொடர்பினை மதிப்பிடும் நோக்கில் பொருத்தப்பட்ட பிற்செலவு மாதிரியுருவின் முடிவிற்கிணங்க, Adj. $R^2$ ஆனது 0.660 ஆக பெறப்பட, F மதிப்பீடான 96.202 ஆனது, மறுக்கப்பட்ட பிரதேசத்திற்குள் வருவதனால் சம்மாந்துறை பிரதேசத்தில் ஸகாத்தினுடைய காத்திரமான பங்கீடானது அப்பிரதேச மக்களின் வருமான சமத்துவத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தவில்லை என்னும் கருதுகோள் மறுக்கப்படுகின்றது. வருமான சமத்துவமின்மையை குறைத்து ஸகாத் நிதியத்தின் செயலாற்றத்தை அதிகரிக்கும் முகமாக ஸகாத் நிதியத்தினை கணனிமயப்படுத்துவதுடன் மக்கள் மத்தியில் உழைத்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தினை வளர்க்கும் முகமாக விழிப்பூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். ஸகாத்தினை தர மறுப்பவர்களுக்கு எதிராக சமயரீதியான கடுமையான நடவடிக்கைகளினை எடுப்பதனூடாக ஸகாத் நிதியத்தினை மேலும் வளர்க்க முடியும்.

***பிரதான சொற்கள் (Key words)*** : வருமான சமத்துவமின்மை, வறுமை, செல்வப்பகிர்வு, ஸகாத்